Ministry of Labour

# ஒன்ராறியோவில் தொழில் நியமங்கள்

2000 ஆம் ஆண்டின் *தொழில் நியமங்கள் சட்டம்* (Employment Standards Act, 2000, ESA) ஒன்ராறியோவிலுள்ள ஊழியர்களைப் பாதுகாப்பதுடன் பெரும்பாலான வேலையிடங்களுக்கான குறைந்த பட்ச நியமங்களை அமைக்கிறது.

**ஊழியர்கள் தமது ESA உரிமைகளைப் பயன்படுத்துகின்றமைக்காக அவர்களை எவ்வகையிலும் தண்டிப்பதிலிருந்து தொழில் தருநர்கள் தடை செய்யப்படுகிறார்கள்.**

FAIR AT WORK ONTARIO

## நீங்கள் அறிய வேண்டியது யாது

**குறைந்த பட்ச வேதனம்**
பெரும்பாலான ஊழியர்கள் ஆகக் குறைந்தது குறைந்த பட்ச வேதனம் வழங்கப்படும் உரிமையைக் கொண்டுள்ளனர். தற்போதைய வீதங்களுக்காக, இங்கு செல்க: **Ontario.ca/minimumwage**.

**வேலை நேரமும் மேலதிக நேரமும்**
வேலை நேரங்களில் நாளாந்த, வாராந்த மட்டுப்பாடுகளும் உணவு இடைவேளை, ஓய்வு நேரங்கள், மேலதிக நேரம் என்பவற்றைப் பற்றிய விதிகளும் காணப்படுகின்றன.

**விடுமுறைக் காலமும் கொடுப்பனவும்**
பெரும்பாலான ஊழியர்கள் ஒவ்வொரு 12 மாத கால வேலையின் பின்னரும் விடுமுறைக் காலத்தை உழைக்கின்றனர். ஓர் ஊழியர் உழைக்கும் விடுமுறை காலக் கொடுப்பனவுத் தொகையைப் பற்றிய விதிகள் காணப்படுகின்றன.

**பொது விடுமுறைகள்**
ஒன்ராறியோவில் ஒவ்வோராண்டும் சில பொது விடுமுறைகள் இருக்கின்றன. பெரும்பாலான ஊழியர்களுக்கு இந்நாட்களில் வேலையிலிருந்து ஓய்வெடுக்கவும் பொது விடுமுறைக் கொடுப்பனவைப் பெறவும் உரித்துள்ளது.

**சமுகமளியாமை விடுமுறைகள்**
ஒன்ராறியோவில் வேலைப் பாதுகாப்பு சமுகமளியாமை விடுமுறைகள் சில இருக்கின்றன. கர்ப்பம், பெற்றோராதல், குடும்பப் பராமரிப்பாளர், தனிப்பட்ட அவசரகால விடுமுறை (கொடுப்பனவு செய்யப்படுவதும் செய்யப்படாததும்), பாலியல் அத்துடன்/அல்லது வீட்டு வன்முறை விடுமுறை (கொடுப்பனவு செய்யப்படுவதும் செய்யப்படாததும்) என்பன உதாரணங்களில் உள்ளடங்குகின்றன.

**முடிவுறுத்தல் அறிவித்தலும் கொடுப்பனவும்**
பெரும்பாலான சந்தர்ப்பங்களில், தொழில் தருநர்கள் தொழிலை முடிவுறுத்தும் போது முற்கூட்டிய எழுத்து மூல அறிவித்தல் அத்துடன்/அல்லது அறிவித்தலுக்குப் பகரமாக முடிவுறுத்தற் கொடுப்பனவு வழங்கியாக வேண்டும்.

**ஏனைய தொழில் உரிமைகள், விதிவிலக்குகள், விசேட விதிகள் என்பன**

முறித்துக் கொள்ளற் கொடுப்பனவுக்கான உரிமைகள், தற்காலிக உதவி முகவரகங்களின் (temporary help agencies) ஒப்படைப்பு ஊழியர்களுக்கான விசேட விதிகள் என்பன உட்பட இச்சுவரொட்டியில் பட்டியலிடப்படாத ஏனைய உரிமைகளும் விதிவிலக்குகளும் விசேட விதிகளும் இருக்கின்றன.

உங்களையும் உங்களது வேலையிடத்தையும் பாதிக்கக்கூடிய ஆகப் பிந்திய செய்திகளைப் பற்றி இற்றைப்படுத்தப்பட்டிருக்க சந்தாதாரராகுங்கள்: Ontario.ca/labournews

உங்களது உரிமைகளைப் பற்றி இங்கு மேலும் அறிந்து கொள்ளுங்கள்:

**Ontario.ca/employmentstandards**

1-800-531-5551 அல்லது TTY 1-866-567-8893

@ONlabour @OntarioMinistryofLabour

Ontario